# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி
## பொதுத்தேர்வு
## 2025
## வளர்தமிழ் 7

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
4 AV DES PRIMEVERES
77290 MITRY MORY
WWW.tamiledc.com

TEDC -FR
TEDC -FR

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |


TEDC -FR

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. பின்வருவனவற்றுள் வல்லினமெய் எழுத்துகள்

அ ) க், ச், ட், த், ப், ற் ☐ ஆ ) ய், ர், ல், வ், ழ், ள் ☐

இ ) ங், ஞ், ண், ந், ம், ன் ☐ ஈ ) க், ச், ங், ஞ், ய், ர் ☐

2. குடிமக்கள் காப்பியம் என அழைக்கப்படும் நூல்

அ ) புறநானூறு ☐ ஆ ) சிலப்பதிகாரம் ☐

இ ) சீவகசிந்தாமணி ☐ ஈ ) நாலடியார் ☐

3. ஏதிலி என்பதன் சொற்பொருள்

அ ) பண்பற்றவர் ☐ ஆ ) அறிவற்றவர் ☐

இ ) கதியற்றவர் ☐ ஈ ) செல்வமற்றவர் ☐

4. கயல்விழி மண்டபத்தை விட்டு வெளியே வருகின்றாள். இச் சொல்லியம் குறிக்கும் காலம்

அ ) இறந்தகாலம் ☐ ஆ ) எதிர்காலம் ☐

இ ) வருங்காலம் ☐ ஈ ) நிகழ்காலம் ☐

5. விபுலாநந்தரின் இயற்பெயர்

அ ) மயில்வாகனன் ☐ ஆ ) வரதன் ☐

இ ) தேவநேசன் ☐ ஈ ) வேதாசலம் ☐

6. நரம்பினால் இசையெழுப்பும் இசைக்கருவிகளில் ஒன்று

அ ) புல்லாங்குழல் ☐ ஆ ) யாழ் ☐

இ ) தாளம் ☐ ஈ ) உடுக்கு ☐

TEDC -FR TEDC -FR

7. “இட்டுப்பார் உண்டவர்கள் இன்புற் றிருக்கையிலே..”என்ற பாடல் இடம் பெற்ற நூல்

அ ) மூதுரை
ஆ ) ஆத்திசூடி
இ ) மணிமேகலை
ஈ ) குடும்பவிளக்கு

8. மணல் + ஆறு

அ ) மணலாறு
ஆ ) மணல்ஆறு
இ ) மனலாறு
ஈ ) மணல்லாறு

9. ஆசிரியர் மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார். இச் சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு

அ ) இல்
ஆ ) கு
இ ) ஆல்
ஈ ) ஒடு

10. கலக்கம் என்பதன் எதிர்ச்சொல்

அ ) நிறைவு
ஆ ) விழிப்பு
இ ) தெளிவு
ஈ ) குறைவு

11. பெங்சூற்றர் கோட்டை அமைந்துள்ள இடம்

அ ) ஆனையிறவு
ஆ ) முல்லைத்தீவு
இ ) கற்சிலைமடு
ஈ ) வெற்றிலைக்கேணி

12. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ ) திங்கள்
ஆ ) பகலவன்
இ ) பரிதி
ஈ ) கதிரவன்



TEDC -FR

TEDC -FR

13. பாடிய என்பது

அ ) பெயரெச்சம் ☐ ஆ ) வினையெச்சம் ☐

இ ) வினைமுற்று ☐ ஈ ) வினையடி ☐

14. வன்னிப் பெருநிலப்பரப்பு பழந்தமிழர் வாழ்ந்த பகுதியாகும். இச் சொல்லியம்

அ ) வினா ☐ ஆ ) ஏவல் ☐

இ ) கூற்று ☐ ஈ ) மெய்ப்பாடு ☐

15. அல்லல் என்பதன் சொற்பொருள்

அ ) துன்பம் ☐ ஆ ) உவகை ☐

இ ) இன்பம் ☐ ஈ ) மகிழ்ச்சி ☐

16. வயல்கள் வரட்சியினால் ______________ வெடித்துக் காணப்படுகின்றன.

அ ) அக்கம்பக்கமாக ☐ ஆ ) பாளம்பாளமாக ☐

இ ) கற்றைகற்றையாக ☐ ஈ ) அணிஅணியாக ☐

17. துள்ளி முகிலைக் கிழித்து மழைத்துளியோடு இறங்கியது

அ ) சுறாமீன் ☐ ஆ ) திருக்கைமீன் ☐

இ ) வாளைமீன் ☐ ஈ ) பாரைமீன் ☐

18. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் அமைந்துள்ள இசைத்தூண்கள்

அ ) 6 ☐ ஆ ) 7 ☐

இ ) 9 ☐ ஈ ) 5 ☐

19. புலவன் என்பதன் எதிர்ப்பாற் சொல்

அ ) புலத்தி ☐ ஆ ) உழத்தி ☐

இ ) குறத்தி ☐ ஈ ) இடைச்சி ☐



TEDC -FR

TEDC -FR TEDC -FR

20. திருக்குறளில் சினம் பற்றிக் கூறும் அதிகாரம்

அ ) விருந்தோம்பல் ☐ ஆ ) வெகுளாமை ☐
இ ) நட்பு ☐ ஈ ) இல்வாழ்க்கை ☐

21. பின்வருவனவற்றுள் கெடுதல் புணர்ச்சி

அ ) நெற்பயிர் ☐ ஆ ) போர்ப்படை ☐
இ ) பணவரவு ☐ ஈ ) இசைவிழா ☐

22. கதிரமலை என்ற இடத்தின் இன்றைய பெயர்

அ ) நல்லூர் ☐ ஆ ) நவாலி ☐
இ ) பூநகரி ☐ ஈ ) கந்தரோடை ☐

23. தமிழ்ப்பள்ளி ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. இதில் வந்துள்ள பயனிலை அடைமொழி

அ ) ஆண்டுவிழா ☐ ஆ ) நடைபெற்றது ☐
இ ) சிறப்பாக ☐ ஈ ) தமிழ்ப்பள்ளி ☐

24. ஏரடிக்கும் சிறு கோலால் தரணி ஆள்பவர்

அ ) மன்னர் ☐ ஆ ) புலவர் ☐
இ ) காராளர் ☐ ஈ ) ஆசிரியர் ☐

25. இல்லறத்தார் பேணும் கடமையாகிய விருந்தோம்பலைச் செய்ய முடியவில்லை என வருந்தியவர்

அ ) மாதவி ☐ ஆ ) ஐயை ☐
இ ) மாதரி ☐ ஈ ) கண்ணகி ☐

புள்ளிகள் 25



TEDC -FR

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

நிலத்திணைகள் இயற்கை கொடுத்த கொடைகளில் ஒன்று. மாந்தர் அவற்றினால் பல பயன்களைப் பெறுகின்றனர். நாம் நிலத்திணைகளில் இருந்து காய், கனி, இலை போன்றவற்றை உணவாகப் பயன்படுத்துகின்றோம். நிலத்திணைகள் இல்லையேல் எண்ணற்ற விலங்குகளும் புழு பூச்சிகளும் உயிர் வாழ முடியாது. உயிரினங்களுக்கு வேண்டிய தூயகாற்றை நிலத்திணைகள் வழங்குகின்றன. நிலத்திணைகள் செழித்து வளர கதிரவனின் ஒளி, நீர், வளமான மண் ஆகியன அகத்தியமானவை. நாம் இயற்கை வளங்களைப் பேணிக் காக்காவிடின் உலகிலுள்ள உயிரினங்கள் அழிந்து விடும்.

1. உயிரினங்களுக்கு வேண்டிய தூயகாற்றை எவை வழங்குகின்றன?

______________________________________________

2. நாம் நிலத்திணைகளில் இருந்து எவற்றை உணவாகப் பயன்படுத்துகின்றோம்?

______________________________________________

______________________________________________

3. இயற்கை கொடுத்த கொடைகளில் ஒன்று எது?

______________________________________________

4. நாம் எவற்றைப் பேணிக் காக்காவிடின் உலகிலுள்ள உயிரினங்கள் அழிந்து விடும்?

______________________________________________

______________________________________________

5. நிலத்திணைகள் செழித்து வளர எவை அகத்தியமானவை?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

TEDC -FR TEDC -FR

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. மாற்றாருக்கு எதிராகப் போராடிய வன்னியின் அரசகுல மகளிர் யாவர்?

_______________________________________________

2. சினங்காத்தலை ஔவையார் இரு சொற்களில் எப்படிக் கூறியுள்ளார்?

_______________________________________________

3. "ஆராரோ ஆரிவரோ" என்பது எவ்வகைப் பாடல்?

_______________________________________________

4. "அரசு ஆணையை அறிவேன் எனினும்
முரசு கட்டிலென அறியாது படுத்தேன்..." இக் கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

_______________________________________________

5. கயிலைவன்னியன் ஆண்ட வன்னிப்பகுதியின் பெயர் என்ன?

_______________________________________________

6. விசயன் காலத்திற்கு முன் இலங்கையில் வாழ்ந்த தமிழ் மரபினர் யாவர்?

_______________________________________________

7. விபுலாநந்த அடிகள் கற்ற மொழிகளுள் இரண்டைத் தருக.

_______________________________________________

புள்ளிகள் 10



TEDC -FR

TEDC -FR TEDC -FR

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## எழுந்திடுவோம்

| | | | | |
|---|---|---|---|---|
| தடுத்தாலும் | போக்கிடுவோம் | எழுந்து | துன்பம் | பேசி |

உயிரே போக நேர்ந்திடினும்
உண்மை ________________ வாழ்ந்திடுவோம்
எத்தனை ________________ வந்தாலும்
எங்கள் நாட்டைக் காத்திடுவோம்

தீமை தன்னைக் கண்டால்
தீயென ________________ அழித்திடுவோம்
தாயினும் இனிய தமிழ்மொழியை
தாய் ________________ வளர்த்திடுவோம்

நீதிக்காகப் போரிடுவோம் - எங்கள்
நீண்ட இடரைப் ________________
நினைவுக்கல்லை அழித்திட்ட - மாந்த
நேயமற்றவரை நாம் வென்றிடுவோம்

புள்ளிகள் 10



TEDC -FR

5) அ) பந்தியை வாசித்து, இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

காலைக்கதிரவன் கிழக்கு வானில் எழுகின்றான். கதிரவனைக் கண்ட நிலா மெல்லமெல்ல மறைந்து செல்கின்றது. சேவல்களும் காகங்களும் ஒலி எழுப்பி விடியலைத் தெரிவிக்கின்றன. கூட்டங்கூட்டமாகப் பறவைகள் பறந்து திரிகின்றன. அவ்வேளை மக்கள் துயில் எழுந்து சுறுசுறுப்பாகத் தங்கள் வேலைகளைச் செய்யத் தொடங்குகின்றனர்.

1. அடுக்குத்தொடர் ஒன்று தருக.

______________________________

2. வினையெச்சம் ஒன்று தருக.

______________________________

3. இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் ஒன்று தருக.

______________________________

4. அஃறிணைப் பன்மைச்சொல் ஒன்று எழுதுக.

______________________________

5. பலர்பாலுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

புள்ளிகள் 10

ஆ) பொருத்தமாக நிரற்கூட்டை நிறைவு செய்க.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| உண்டான் | | |
| | | வருவார் |
| | பறக்கின்றது | பறக்கும் |

புள்ளிகள் 05

6) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிரை | வலை | கனி | நிறை | வளை | கணி |

1. எலி ______________ யில் வாழ்ந்து வந்தது.
2. தோட்டக்காரன் ______________ களைக் கொத்தித் தின்னும் பறவைகளை விரட்டினான்.
3. மாஞ்சோலையில் ______________ யாக நின்ற மாமரங்களில் மாங்காய்கள் காய்த்துத் தொங்குகின்றன.
4. மாதவன் பழங்களின் ______________ யை நிறுத்துப் பெட்டியில் அடுக்கினான்.
5. வேடன் விரித்த ______________ யில் புறாக்கள் சிக்கின.

புள்ளிகள் 05

TEDC -FR

TEDC -FR

**7) தரப்பட்டுள்ள சொற்களை வைத்து, பழமொழிகளைப் பொருத்தமாக எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| முளையிலே | மிடுக்கு | வெள்ளம் | அகப்பையில் | கூழ் |

1. பானையில் இருந்தால் தானே ____________________ வரும்.

2. விளையும் பயிரை ____________________ தெரியும்.

3. குடிப்பது ____________________ கொப்பளிப்பது பன்னீர்.

4. அடம்பன் கொடியும் திரண்டால் ____________________.

5. ____________________ வருமுன் அணை கட்ட வேண்டும்.

புள்ளிகள் 05

**8) பொருத்தமான சொல்லை வைத்து, குறளை நிறைவு செய்க.**

1. அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை

   ____________________ மிலான்க ணுயர்வு

   ( விழுப்ப, ஒழுக்க, இழுக்க )

2. மோப்பக் குழையும் ____________________ முகந்திரிந்து

   நோக்கக் குழையும் விருந்து

   ( அனிச்சம், பனிச்சம், கனிந்து )

புள்ளிகள் 05



TEDC -FR

TEDC -FR
TEDC -FR

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- கயிலைவன்னியன
- இலக்கிய இன்பம்
- அங்காடி
- விலங்குகள்

புள்ளிகள் 15


TEDC -FR

TEDC -FR

TEDC -FR



TEDC -FR

TEDC -FR
TEDC -FR

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


TEDC -FR